**செய்தி வெளியீடு எண்:514** **நாள் : 11.10.2014**

**பத்திரிக்கை செய்தி**

2007–2008, 2009–2010 மற்றும் 2010–2011 ஆம் ஆண்டிற்கான நேரடி தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்ட 54 துணை ஆட்சியர்கள் 25–09–2013–ம் தேதி முதல் 54 வார கால துணை ஆட்சியர் பயிற்சியினை மேற்கொண்டதில் 52 துணை ஆட்சியர்கள் பயிற்சியினை திருப்திகாரமாக நிறைவு செய்துள்ளனர். மீதமுள்ள இரண்டு துணை ஆட்சியர்கள் பயிற்சியினை மேற்கொண்டும் வருகின்றனர்.

மேற்காணும் பயிற்சியினை மாவட்ட தலைநகரங்களிலும், தலைமைச் செயலகத்திலும், சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்திலும் எடுத்துள்ளனர்.

தமிழகத்தில் மொத்தம் 79 வருவாய் கோட்டங்கள் உள்ளன. இவற்றில் 30 கோட்டங்களுக்கு வருவாய் கோட்டாட்சியராக புதிதாக பணியேற்க உள்ள துணை ஆட்சியர்களை பணி நியமனம் செய்தும் மீதமுள்ளவர்களுக்கு துணை ஆட்சியர் நிலையிலான இதர பணியிடங்களில் பணி நியமனம் செய்தும் அரசாணை பிறப்பித்துள்ளது. மேற்காணும் துணை ஆட்சியர்கள் முதன்முதலில் துணை ஆட்சியர்களாக பணியேற்பு செய்வதால் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையின் முக்கியத்துவம் குறித்தும் அரசு திட்டங்கள் மற்றும் குறிப்பாக தொலைநோக்கு திட்டம் 2023ஐ திறம்பட நிறைவேற்றவும் துணை ஆட்சியர்களின் கடமை மற்றும் பொறுப்புகள்

குறித்தும் விரிவாக எடுத்துரைத்து மக்கள் பணியில் வெற்றி பெற வாழ்த்தினார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. R.B. உதயகுமார், டாக்டர்.டி.எஸ்.ஸ்ரீதர், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர், டாக்டர்.எம்.ஜெயராமன், இ.ஆ.ப., கூடுதல் வருவாய் நிர்வாக ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செயலாளர், வருவாய்த்துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**